2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

59—

மருத்துவக் கல்லூரி

***20702—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் மூலமாக மருத்துவக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என மக்களுக்காக மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ள மகத்தில் பிறந்த எங்கள் மாதரசி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களே, பிறந்த நாள் காணும் (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் பல்லாண்டு, பல்லாண்டு, பல நூறாண்டுகள் நீடூழி வாழவேண்டுமெனவும், மிக விரைவில் மீண்டும் இந்த அவையிலே முதலமைச்சராக அமர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மக்களுக்கு இன்னும் பல நல்ல திட்டங்களை வழங்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் சார்பாக மருத்துவக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் தொகுதிக்கு சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதி வழங்கி ஆணை பிறப்பித்திருக்கின்ற தமிழக அரசிற்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு சமூகம், சமூக, பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைய வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு கல்வி மிக அவசியமாக இருக்கின்றது. கல்வி என்பது அடிப்படைக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரையில் படிப்பதாகும். உயர் கல்வியிலே, குறிப்பாக, தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, மருத்துவப் படிப்புகள், பொறியியல் படிப்புகள், நிருவாகம் சம்பந்தப்பட்ட படிப்புகள் இருக்கின்றன. தமிழகத்திலே சிறுபான்மை சமுதாய மக்களுக்காக பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், ஒரு மருத்துவக் கல்லூரிகூட கிடையாது. தமிழகத்தினுடைய சிறுபான்மை மக்கள் மருத்துவக் கல்வியைப் பெறுகின்ற வகையிலே தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் சார்பாக ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்து, சிறுபான்மை மக்கள் மருத்துவக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை தமிழக அரசு ஏற்படுத்தித் தருமா? அதேபோல, தமிழகத்தில் இருக்கின்ற அத்துணை மாவட்டங்களிலும் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான இடம் வக்ஃபு வாரியத்திடம் இருக்கின்றது. ஆகவே, தமிழக அரசு மறுபரிசீலனை செய்து, தமிழ்நாட்டில் வக்ஃபு வாரியத்தின் சார்பாக மருத்துவக் கல்லூரி அமைத்துத் தருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு உதவிபெறும் மருத்துவக் கல்லூரிகளில் சிறுபான்மை இஸ்லாமிய மாணவ, மாணவியர்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டின்மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 837 இடங்களில், 694 எம்.பி.பி.எஸ்., இடங்களும், 134 எம்.டி., இடங்களும், 9 எம்.டி.எஸ்., இடங்களும் இஸ்லாமிய மாணவ, மாணவிகளுக்காக மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 19 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. மேலும், கரூரில் ஒரு மருத்துவக் கல்லூரியும்,*

2015 பிப்ரவரி 23]

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியும் துவங்கப்படவுள்ளன. இதுதவிர, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் வருடத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க அரசு உத்தரவிட்டிருக்கின்றது. இந்த மருத்துவக் கல்லூரிகளில் இஸ்லாமிய மாணவ, மாணவிகள் சேர்ந்து பயன்பெறலாம். மேலும், ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டும் என்றால், தொடரா செலவினம் என்றும், தொடரும் செலவினம் என்றும், மொத்தத்தில் ரூ.181.08 கோடி நிதி தேவைப்படும். எனவே, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குப் போதிய நிதியாதாரம் இல்லாததால் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்மூலம் மருத்துவக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

மாணவியர் விடுதி

***6213—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரிலுள்ள அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவியருக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை அகவை 67 காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலே தங்களுடைய பிறந்த நாளை ஏழையெளியவர்களுடைய மகிழ்ச்சி நாளாக, வறியவர், முதியவர், மாற்றுத் திறனாளிகளினுடைய மனநிறைவு நாளாக,